# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்
# 2013 யூலை மாதம் 23 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு

## நிகழ்ச்சி நிரல்

I. **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

II. **அறிக்கைகளையும், ஆவணங்களையும் சமர்ப்பித்தல்**

III. **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

IV. **மனுக்கள்**

V. **கேள்விகள்**

01. **கௌரவ உதேன விஜேரத்ன உறுப்பினர் அவர்களினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதி, திட்டமிடல், சட்டம், ஒழுங்கு, காணி, கல்வி, உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், மனிதவலு மற்றும் தொழிற்துறை, பொருளாதார மேம்பாடு மின்சக்தி, மின்வலு, வியாபார விடயப் பொறுப்பு அமைச்சரிடம் கேட்பதற்கு :** (கே/v (1)13/10)

அ. மீரிகம டட்லி சேனாநாயக்க மாதிரி கணிஷ்ட பாடசாலைக்கு முதலாம் தரத்திற்கு ஆட்சேர்க்கும் போது தேவையற்ற நிர்ப்பந்தம் நிகழ்ந்துள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. ஆட்சேர்த்துக் கொள்ளும் நேர்முகப் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்ட 33 பிள்ளைகளும், மேன் முறையீட்டினூடாக 02 பிள்ளைகளும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் பிள்ளைகள் 07 பேர் உள்ளடங்களாக 42 பேர் என்ற அடிப்படையில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் என்பதனை நீங்கள் ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. வகுப்பில் 45 பேரை பூர்த்தி செய்வதற்கு மிகுதியாக உள்ளவர்களில் அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொண்டதன் கீழா அல்லது வேறு முறையின் மூலமா சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர் ?

ஈ. அப் பாடசாலையில் ஆரம்பத்தில் ஆட்சேர்க்கப்பட்ட பின்னர் காணப்பட்ட 13 வெற்றிடங்களில் மாகாண கல்வித் திணைக்களத்தினால் அனுப்பப்பட்ட இரண்டு பட்டியல்களில் இருந்து 09 பிள்ளைகள் எவ்வாறு ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் ?

உ. பாடசாலையின் முதலாவது தரத்திற்கு பிள்ளைகளை ஆட்சேர்க்கும் போது அதிக புள்ளிகள் மற்றும் காத்திருக்கும் பட்டியளினுள் உள்ளடக்கப்பட்டுள்ள பிள்ளைகளின் புள்ளிகளின் எண்ணிக்கையை குறிப்பிடுவீர்களா ?

ஊ. அப்பிள்ளைகளின் பெயர்கள் நேர்முகப் பரீட்சைப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளதா, இல்லையா ?

எ. அதிக புள்ளிகள் என்ற அடிப்படைக்குப் புறம்பாக செயற்படுவது பிள்ளைகளுக்கு மேற்கொள்ளும் அநீதி ஒன்று அல்லவா ?

ஏ. அந்த அநீதி தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

ஐ. இதன் கீழ் தவறு செய்தவர்களுக்கு சட்ட ரீதியாக தண்டனை வழங்க நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஒ. அநீதிக்கு உட்பட்ட பிள்ளைகளுக்கு நீதியை வழங்குவீர்களா ?

02. **கௌரவ யூ.ஜோர்ஜ் பெரேரா எதிர்க்கட்சியின் பிரதான ஏற்பாட்டாளரினால் கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :**
**(கே/v (1)13/11)**

அ. களனி பொதுச் சபை கூட்டுறவுச் சங்கம் தொடர்ச்சியாக 06 வருட காலம் தேர்தலை நடத்தாது கூட்டுறவு ஆணையாளரினால் பெயரிடப்பட்ட தவிசாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஆ. இவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள தவிசாளர் இச் சங்கத்தின் அங்கத்தவர் இல்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

இ. அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் இந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ளதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஈ. இத் தவிசாளரின் கீழ் கூட்டுறவுச் சங்கத்தில் பாரிய அளவு நிதி மோசடி நிகழ்ந்துள்ளது என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

உ. தற்போது பல்வேறுபட்ட நபர்கள் மற்றும் இயக்கங்களினூடாக அறிவிக்கப்பட்டுள்ள இந்த ஊழல் மோசடி தொடர்பாக அரசியல் செல்வாக்கின் காரணமாகவே நடவடிக்கை எடுக்கவில்லை என்பதனை ஏற்றுக்கொள்கின்றீர்களா ?

ஊ. நாளுக்கு நாள் அழிவுக்கு உட்படும் கூட்டுறவுச் சங்கத்தை பாதுகாப்பதற்கு அமைச்சர் என்ற வகையில் நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

எ. இல்லையாயின் ஏன் ?

ஏ. 06 வருடகாலமாக இச் சங்கத்துக்காக ஏன் தேர்தல் நடத்தவில்லை ?

ஐ. எதிர்காலத்திலாவது தேர்தல் ஒன்றை நடத்துவீர்களா ? அப்படியாயின் எப்போது

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும் / அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. சபை நடவடிக்கை

**கௌரவ சபை நடவடிக்கை அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

பிரேரணை :

"இன்றைய தினம் பொது நடவடிக்கை முன்னுரிமை பெற வேண்டும்."

## X. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

01. **கௌரவ சிறிகமல் பிலீஷியன் த சில்வா உறுப்பினர்**

*இலங்கையானது சுதந்திரக் கல்வி நடைமுறையில் உள்ள நாடொன்று என தெரிவிக்கப்படுகின்றது, எனினும் நாட்டினுள் மத்திய அரசு, மாகாண சபை, தனியார், சர்வதேச என பாடசாலைகள் இயங்குகின்றன என்பதை நாங்கள் அறிவோம் இவற்றுள் பெரும்பாலான பாடசாலைகள் மாகாண சபைகளுக்கே உரியதாகின்றன இம் மாகாண சபைகள் வருடாந்தம் வரவு செலவு திட்டத்தின் மூலம் அதிகளவு நிதி கௌரவ முதலமைச்சர் அங்கத்துவம் பெறும் கல்வி அமைச்சுக்கு ஒதுக்கப்படுகின்றது எனினும் எங்கள் மாகாண பாடசாலைகளின் பராமரிப்புக்காக வருடாந்தம் ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை என அதிகாரியினால் தெரிவிக்கப்படுவதன் காரணமாக பெற்றோர்கள் பழைய மாணவர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வேறு பல்வேறுபட்ட முறைகளின் மூலம் பாடசாலைகளின் குறைபாடுகள் தீர்க்கப்படுகின்றன என்பது வெளிப்படையாகும் ஒழுங்கற்ற முறையில் இடம்பெறும் இந் நடவடிக்கையின் காரணமாக பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் ஏற்படும் கஷ்டத்தை*

*தவிர்ப்பதற்காக ஒழுங்கான முறை ஒன்றினை விரைவாக தயாரிக்க வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை எண்ணுகிறது.*

(பி/v (01)13/02)

02. **கௌரவ கீர்த்தி உடவத்த உறுப்பினர்**

*"தற்போது அறிவிக்கப்படுவதற்கிணங்க பிரதேச அரசியல் தொடக்கம் தேசிய அரசியல் வரையிலான மக்கள் பிரதிநிதிகளின் தராதரம் குறைந்து செல்கின்றது இதற்குத் தீர்வொன்றாக தேர்தல்களில் நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்யும் போது அரசியல் கட்சிகளினால் முன்வைக்கப்படும் பெயர்ப் பட்டியல்களை வித்துவான் குழுவிற்கு அனுப்பி அதில் சிபாரிசு செய்யப்படும் பெயர்களை மட்டும் ஏற்றுக்கொள்வதற்கு தேர்தல் ஆணையாளருக்கு பணிப்புரை வழங்குவதற்கு ஏற்ற முறையில் புதிய சட்ட விதிகள் தயாரிக்கப்பட வேண்டும் என இந்த மேல் மாகாண மாகாண சபை அரசுக்கு பிரேரணை தெரிவிக்கின்றது."*

(பி/v (01)13/03)

## XI. பொது நடவடிக்கை

01. **கௌரவ போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார நடவடிக்கை, கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல் மற்றும் பகிர்ந்தளிப்பு நடவடிக்கை, கிராம அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு**

<u>2013 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன கட்டண ஒழுங்குவிதிகளுக்காக மேல் மாகாண மாகாண சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளல்</u>

"1991 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, மேல் மாகாணத்தின் மோட்டார் வாகன நியதிச் சட்டத்தின் 129(1) ஆம் பிரிவின் கீழ் மேல் மாகாண போக்குவரத்து, விளையாட்டு, இளைஞர் விவகார, கலை, கலாசார அலுவல்கள், கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கலும் விநியோகமும் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரினால் தயாரிக்கப்பட்டு 1808/11 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விஷேட வர்த்தமானிப் பத்திரிகையில் 2013 ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டிருந்த "2013 ஆம் ஆண்டின் மோட்டார் வாகன கட்டணங்கள் தொடர்பான ஒழுங்கு விதிகள்" என அழைக்கப்படும் ஒழுங்குவிதிகளை மேல் மாகாண மாகாண சபையின் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கின்றேன்."

## XII. சபை ஒத்திவைப்பு பிரேரணை

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2013.07.10 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா.)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, B அலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.